**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,LLM.,B.Sc.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,சிங்கம்புணரி

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ம் நாள் திங்கள்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 15 ம் நாள்)

**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 79/2020**

**(CNR No:TNSV160000722020)**

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
நெற்குப்பை காவல் நிலையம்,
குற்ற எண்:4/2019 -- குற்ற முறையீட்டாளர்

/ எதிர் /

1. வெள்ளைச்சாமி (வயது 47/19)
த/பெ,வேலாயுதம்,
கீழத்தெரு,
ஆ.தெக்கூர்,
சிங்கம்புணரி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.

2. அழகுமீனாள் (வயது 37/19)
க/பெ.வெள்ளைச்சாமி,
கீழத்தெரு,
ஆ.தெக்கூர்,
சிங்கம்புணரி தாலுகா,
சிவகங்கை மாவட்டம். -- குற்றம்சாட்டப்பட்டவர்கள்

**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | குற்றம்சாட்டபட்டவர்கள் காவல் அடைப்பிற்கு உட்படுத்திய காலம் | இல்லை |
| 2. | நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 19.08.2020 |
| 3. | இவ்வழக்கு கோப்பினை அமர்வு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | இல்லை |

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 17:59:41 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் கு.வி.மு.ச பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்டு குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 28.10.2022 | | |
| 5. | குற்றவியல் பல்வகை மனு தாக்கல் செய்த விவரமும் அதன் முடிவும் (கு.வி.மு.ச.பிரிவு 317 மனு தவிர) | (1) குற்றம்சாட்டப்பட்டவர்களின் 438 சிஆர்.பி.சி–யின் கீழான பிணை மனு சிஆர்.எம்.பி.எண்:158/2019 – 21.01.2019 அனுமதிக்கப்பட்டது. (மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை) குற்றம்சாட்டப்பட்டவரின் சரண்டர் மனு: சிஆர்.எம்.பி.எண்:288/2019 நாள்:31.01.2019 அனுமதிக்கப்பட்டது. 311 சிஆர்.பி.சி. கீழான மனு: சிஆர்.எம்.பி.எண்:4/2025 நாள்:11.12.2025 அனுமதிக்கப்பட்டது. | | |
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை செய்த நாள் | குறுக்கு விசாரணை செய்த நாள் |
| | | அ.சா.1 | 10.05.2023 | 10.05.2023<br>22.01.2026 |
| | | அ.சா.2 | 15.05.2024 | 15.05.2024<br>22.01.2026 |
| | | அ.சா.3 | 19.03.2025 | இல்லை |
| | | அ.சா.4 | 29.05.2025 | இல்லை |
| | | அ.சா.5 | 19.11.2025 | 19.11.2025 |
| | | அ.சா.6 | 04.03.2026 | 04.03.2026 |
| | | அ.சா.7 | 11.03.2026 | 11.03.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ) ன் படி குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் வினாக்கள் வினவப்பட்ட நாள் | 12.03.2026 | | |
| 8. | குற்றம்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான விவரம் மற்றும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரான | இல்லை | | |

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 17:59:54 +0530

| | | |
|---|---|---|
| | விவரம் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விவரம் | |
| 9. | மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தடை உத்தரவு குறித்த விவரம் | இல்லை |

இவ்வழக்கானது ஆண்டுபட்டிகை வழக்கு எண்:79/2020 என இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 24.03.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.முத்தையா அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

1. நெற்குப்பை காவல்நிலைய காவல் ஆய்வாளர் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 326, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 324, 427, 506(2)ன் கீழும் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

2(1).இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் குடும்பத்திற்கும் நிகழ்நிலை புகார்தாரர் சித்தப்பாவான 1வது எதிரிக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக நீண்ட நாட்களாக முன்பகை இருந்து வந்த நிலையில், 08.01.2019ம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு நிகழ்நிலை புகார்தாரர் ஆ.தெக்கூரில் உள்ள தனது வீட்டின் முன்பு வாசலில் சாணி தெளித்து கொண்டு தனது குழந்தையை சத்தம் போட்டு கொண்டிருந்த போது எதிரிகள் தங்களை தான் பேசுவதாக நினைத்து 2வது எதிரி அழகுமீனாள் நிகழ்நிலை புகார்தாரரை கற்களால் தாக்கி நிகழ்நிலை புகார்தாரர் நெற்றியிலும், வலது முழங்காலிலும் சொற்ப காயத்தை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:00:00 +0530

ஏற்படுத்தியதாகவும், 1வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை பெண் என்றும் பாராமல் கட்டையால் நிகழ்நிலை புகார்தாரரின் இடது பக்க தோள்பட்டையில் அடித்து கொடுங்காயத்தை எற்படுத்தியதாகவும், 2வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரின் செல்போனை வாங்கி கீழே போட்டு ரூ.90/– மதிப்புள்ள போனின் டெம்பர்கிளாசினை உடைத்து சேதப்படுத்தியதாகவும் எதிரிகள் இருவரும் நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 326, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 324, 427, 506(2)ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3.புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த இந்த நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர்களின் குற்றச்செயல் குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினர். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4.குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் குற்றம் குறித்து வினவிய போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தனர். இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. குற்றம்சாட்டப்பட்டவர்களின் கருத்தும் கேட்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்து அடிப்படை முகாந்திரம் இருந்த காரணத்தால் 1வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 326, 427, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2வது

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:00:07 +0530

குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 324, 427, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து, வாசித்து விளக்கி கூறி வினவப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்தனர். எனவே, அரசு தரப்புச் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5.அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

6.**<u>அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :-</u>**

6(1).அ.சா.1 சொர்ணாம்பிகா புகார்தாரர் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர். இவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 07.01.2019 ம் தேதி அவரது வீட்டின் கீழ்பகுதியில் தகரம் மற்றும் தட்டி வைத்து அடைக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார் என்றும் இதனால் நெற்குப்பை காவல்நிலையத்தில் அவரது நடவடிக்கை குறித்து புகார் அளித்தோம் என்றும் போலீசார் சம்பவ இடத்தில் கூரையை மட்டும் வேய்ந்து கொள்ளுமாறும், தகரம் மற்றும் தட்டிகளை வைத்து அடைக்க கூடாது என்று அறிவுறுத்தினார்கள் என்றும் மறுநாள் காலை 7.00 மணிக்கு தங்கள் வீட்டு வாசலில் சாணி தெளித்து கொண்டிருந்த போது வெள்ளைசாமி, அழகுமீனாள் மற்றும் வெள்ளைசாமியின் மகன்கள் மூன்று பேர் தன்னிடம் வந்து புகார் எதற்கு கொடுத்தார் என்று அடிக்க வந்தார்கள் என்றும் தான் ஒன்றை ஆளாக அங்கு நின்று கொண்டிருந்தேன் என்றும் அங்கிருந்து ஓடிவிடலாம் என்று சம்பவ இடத்திலிருந்து ஓடினேன் என்றும் அவர்கள் அனைவரும் ஓடி வந்து வாணி என்பவர் வீட்டு வாசலில் தன்னை கீழே தள்ளிவிட்டார்கள் என்றும் எதிரிகள் கொண்டு வந்த கட்டை மற்றும் கற்களை கொண்டு தன்னை தாக்கினார்கள் என்றும் அழகுமீனாள் என்பவர் தன்னுடைய

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:00:13 +0530

இடது காதில் அறைந்து நீ இருப்பதால் தான் பிரச்சனை இல்லையென்றால் பிரச்சனை இல்லை என்று கூறினார் என்றும் தனது போனை வெள்ளைசாமி என்பவர் பிடுங்கி கல்லை வைத்து நைத்து உடைத்து போட்டார்கள் என்றும் தனது கையில் இருந்த பர்ஸ், அதிலிருந்து ஏடிஎம்கார்டு மற்றும் கொஞ்ச பணத்தை வெள்ளைசாமி மூலம் எடுத்து கொண்டார்கள் என்றும் பின்னர் தானாக எழுந்து நடந்து சந்தை வழியாக வந்து கொண்டிருந்த போது தனது அப்பா எதிரே வந்து கொண்டிருந்தவரிடம் விவரம் கூறி தான், தனது அம்மா அப்பா மூவரும் நெற்குப்பை காவல்நிலையம் சென்று, சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் புகாரை எழுதி கொடுங்கள் என்று கேட்ட போது தான் எழுத முடியவில்லை என்று கூறியதாகவும் தனது கையில் இருந்த செல்போனை போலீசார் வாங்கி கொண்டார்கள் என்றும் பின்னர் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், இந்த சம்பவத்திற்கு எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அ.த.சா.ஆ.1 புகார்மனு கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6(2). அ.சா.2 சக்திவேல் சம்பவத்தை கேள்விபட்ட நபர் ஆவார். இவர் அ.சா.1ன் தகப்பனார் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1யை தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த நிகழ்வினை கேள்விபட்டு சென்று பார்த்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 வைரவன் பார்வை மகஜர் சாட்சியாவார். இவர் தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

6(3). அ.சா.4 வாணி சம்பவத்தை கண்ணுற்ற நபராவார். இவர் தனது சாட்சியத்தில் அ.சா.1யை எதிரிகள் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த நிகழ்வினை கண்ணுற்றது குறித்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

6(4). அ.சா.5 ஜனனி பிரியா மருத்துவர் தனது சாட்சியத்தில் தான் பொன்னமராவதி வளையப்பட்டி அரசு பாப்பாயி ஆச்சி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது 08.01.2019ம் தேதி காலை சுமார்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:00:19 +0530

8.40 மணிக்கு அ.சா.1 தன்னை 4 ஆண்களும், 1 பெண் நபரும் காலை 7 மணிக்கு கல் மற்றும் கட்டையால் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதனை செய்தும், மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததில் அ.சா.1க்கு இடது கை தோள்பட்டையில் முறிவு இருப்பதாக அ.த.சா.ஆ–3 கருத்துரை வழங்கியதை வைத்து அ.த.சா.ஆ.2 விபத்து பதிவேட்டு நகல் வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6(5). அ.சா.6 கருணாநிதி சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 09.01.2019ம் தேதி தான் நெற்குப்பை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 20.30 மணிக்கு மனு எண்:3/2019ல் சம்பந்தபட்ட புகாரை பார்வையிட்டு அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்:4/2019 இதச பிரிவுகள் 147, 148, 324, 506(2), 427, 379(NH), பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் பின்னர் அன்றையதினம் 21.30 மணிக்கு சம்பவ இடமான அ.தெக்கூர் கிராம் அ.சா.1ன் வீட்டிற்கு முன்பு சென்று சாட்சிகள் வயிரவன், ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்து பட்டியல் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, 1,2 எதிரிகள் மட்டும் சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்ததால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரிகளின் மகன்களின் பெயர்களை நீக்கி அ.த.சா.ஆ.7 எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6(6). அ.சா.7 திருமதி.அரங்கநாயகி காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை மீண்டும் விசாரணை செய்த போது அவர்கள் ஏற்கனவேக்குரிய வாக்குமூலத்தை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:00:26 +0530

தன்னிடம் கூறினார்கள் என்றும் காயம்பட்ட அ.சா.1 சொர்ணாம்பிகாவை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் காயம்பட்ட அ.சா.1 க்கு மருத்துவ சிகிச்சை அளித்த பொன்னமராவதி அரசு மருத்துவமனை மருத்துவர் ஜனனி பிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயம் சான்று பெற்று வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 324, 506(2), 427, 326 இதச மற்றும் 4 of TNPWH Act ன் கீழ் மாற்றம் செய்து அ.த.சா.ஆ.8 சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து எதிரிகளின் மீது குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தபட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் விளக்கிக் கூறி கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b)–ன் கீழ் வினவிய போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் அவை அனைத்தும் பொய்யென்றும் அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்று மறுத்தனர். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

8.பின்னிட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

9. அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது புகார்தாரரான அ.சா.1 யை 1 வது எதிரி கட்டையால் இடது பக்க தோள்பட்டையில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியது குறித்தும், 2 வது எதிரி கற்களால் நெற்றியிலும், வலது முழங்காலிலும் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியது குறித்தும் வாய்மொழியாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மேற்படி பாதிக்கப்பட்ட சாட்சிக்கு ஆதரவாக அ.சா.2 ன் சாட்சியம் அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:00:32 +0530

வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

10. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றத்தை நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும் இவ்வழக்கில் எதிரிகள் குடும்பத்திற்கும் அ.சா.1 க்கும் குடும்பத்திற்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் காரணமாக புகார்தாரர் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது வன்மம் கொண்டு பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதம் எடுத்துரைத்தார்.

**11.<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:-**

(அ). 1 வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 326, 427, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2 வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 324, 427, 506(2)ன் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

(ஆ).ஆம் எனில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன என்பதேயாகும்.

**12.<u>பரிசீலனையும் தீர்வும்</u>:-**

12(1) இவ்வழக்கில் அ.சா.1 சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாவார். அ.சா.2 சம்பவத்தை கேள்விபட்ட சாட்சியாவார். சம்பவம் குறித்து அ.சா.1, அ.சா.2 மட்டுமே சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.2 அ.சா.1 ன் மகள் என்பதால் அ.சா.2 அக்கறையுடைய சாட்சியாவார் என்றும் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் அக்கறை கொண்ட சாட்சிகள் என்பதால் அவர்களது சாட்சியம் ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்று எதிரிகள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

The Hon'ble Apex Court in State of Bihar -vs- Basawan Singh, AIR 1958 SC 500 has held that a court should examine the evidence of a related and

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:00:38 +0530

interested witness, having an interest in seeing the accused punished and also having some enmity with the accused with greater care and caution than the evidence of a third party disinterested and unrelated witness

மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் இவ்வழக்கினை பரிசீலிக்கையில் அ.சா.1, அசா.2 ஆகியோர்கள் அக்கறை கொண்ட சாட்சிகள் என்பதால் அவர்களின் சாட்சியங்கள் வாயிலாக அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

12(2). 1வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 326, 427, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 324, 427, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. அரசு தரப்பில் 08.01.2019ம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு அ.சா.1ன் பெண்மைக்கு களங்கம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 1வது எதிரி அ.சா.1யை கட்டையால் இடது தோள்பட்டையில் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2வது எதிரி கற்களால் அ.சா.1ன் நெற்றியிலும், வலது முழங்காலிலும் சொற்பகாயத்தை ஏற்படுத்தி, எதிரிகள் இருவரும் கொலைமிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளனர் என்பதை ஐயப்பாடின்றி நிரூபிக்க வேண்டும்.

12(3). இவ்வழக்கின் 1வது எதிரி மீது இதச பிரிவு 326, 2வது எதிரி மீதான இதச பிரிவு 324ன் கீழான குற்றச்சாட்டை பரிசீலக்கையில் கடந்த 08.01.2019ம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு ஆ.தெக்கூரில் உள்ள நிகழ்நிலை புகார்தாரர் வீட்டின் முன்பு வாசலில் சாணி தெளித்து கொண்டு தனது குழந்தையை சத்தம் போட்டு கொண்டிருந்த போது எதிரிகள் தங்களை தான் பேசுவதாக நினைத்து 2வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை கற்களால் தாக்கி நெற்றியிலும், வலது முழங்காலிலும் சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவும், 1வது எதிரி கட்டையால் இடது பக்க தோள்பட்டையில்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:00:44 +0530

அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. அ.சா.1 தனது புகாரில் 08.01.2019 ம் தேதி காலையில் வீட்டு வாசலில் சாணி போட்டு கொண்டிருந்த தன்னை கற்களால் தாக்கினார்கள் என்று கூறியுள்ளார்.

12(4). அ.சா.1 தனது சாட்சியத்தில் 08.01.2019 ம் தேதி காலை 7.00 மணிக்கு தங்கள் வீட்டு வாசலில் சாணி தெளித்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது எதிரிகள் மற்றும் வெள்ளைசாமியின் மகன்கள் மூன்று பேர் தன்னிடம் வந்து புகார் எதற்கு கொடுத்தாய் என்று தன்னை அடிக்க வந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது புகாரில் காலை எத்தனை மணிக்கு வாசலில் சாணி தெளித்ததாக குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் அ.சா.1 தனது புகாரில் எந்தெந்த எதிரிகள் தன்னை கற்களால் தாக்கினார்கள் என்பது குறித்து குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை.

12(5). அ.சா.1 தனது சாட்சியத்தில் வெள்ளைசாமி, அழகுமீனாள் மற்றும் வெள்ளைசாமியின் மகன்கள் மூன்று பேர் தன்னிடம் வந்து புகார் எதற்கு கொடுத்தாய் என்று தன்னை அடிக்க வந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் முதல் சம்பவமான காலையில் அ.சா.1 வீட்டின் வாசலில் சாணி தெளித்து கொண்டிருந்த போது எதிரிகள் கற்களால் தாக்கியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(6). அ.சா.1 தனது புகாரில் தான் ஓடி வந்து வாணி வீட்டின் முன்புறம் ரோட்டில் விழுந்து விட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் தான் ஒற்றை ஆளாக அங்கு நின்று கொண்டிருந்தேன் என்றும் பின்னர் ஓடிவிடலாம் என்று நினைத்து சம்பவ இடத்திலிருந்து ஓடினேன் என்றும் அவர்கள் அனைவரும் ஓடி வந்து வாணி என்பவர் வீட்டின் வாசலில் தன்னை கீழே தள்ளிவிட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 தானாக கீழே விழுந்தாரா? எதிரிகள் தள்ளிவிட்டார்களா? என்ற ஐயப்பாடு

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:00:51 +0530

எழுகிறது.

12(7). அ.சா.1 தனது புகாரில் எதிரிகள் வெள்ளைசாமி, மனைவி அழகுமீனாள், மகள்கள் மூன்று பேரும் தன்னை கற்களாலும், கட்டையாலும் தாக்கியதாக கூறியுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் கொண்டு வந்த கட்டை மற்றும் கற்களை கொண்டு தன்னை தாக்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்திலும், புகாரிலும் எந்தெந்த எதிரிகள் எந்தெந்த ஆயுதங்களை கொண்டு தாக்கினார்கள் என்பது குறித்து குறிப்பிட்டு கூறவில்லை.

12(8). அ.சா.1 தனது சாட்சியத்தில் அழகுமீனாள் என்பவர் தன்னுடைய இடது காதில் அறைந்து நீ இருப்பதால் தான் பிரச்சனை இல்லையென்றால் பிரச்சனை இல்லை என்று கூறினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் 2 வது எதிரி தனது இடது காதில் அறைந்து நீ இருப்பதால் தான் பிரச்சனை இல்லையென்றால் பிரச்சனை இல்லை என்று கூறினார் என்று புகாரில் கூறாத புதிய சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.த.சா.ஆ.1 புகார்மனு உண்மைதன்மையுடையதா? நம்பக் தன்மையுடையதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(9). அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.5 பொன்னமராவதி அரசு மருத்துவமனை மருத்துவர் தனது சாட்சியத்தில் 08.01.2019 ம் தேதி தன்னிடம் சிகிச்சைக்கு வந்த அ.சா.1 யை பரிசோதனை செய்ததில் இடது கை முட்டியில் வலி இருப்பதாக சொன்னார் என்றும் இடது நெற்றியில் அவருக்கு சிராய்ப்பு காயம் இருந்தது என்றும் வலது கால் முட்டியில் சிராய்ப்பு காயம் இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது புகாரில் எந்தெந்த எதிரிகள் தன்னை எந்தெந்த இடத்தில் தாக்கி காயம் ஏற்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை. அரசு தரப்பு வழக்கானது 2 வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை நெற்றியிலும், வலது முழங்காலிலும்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:00:57 +0530

கற்களால் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. எனவே அ.சா.1 க்கு ஏற்பட்ட சாதாரண காயம் 2 வது எதிரியால் தான் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(10). அ.சா.5 மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 இடது கையில் வலி இருந்ததால் நுண்கதிர் படம் எடுக்க வேண்டி இருந்ததால் அவரை உள்நோயாளியாக அனுமதித்து மறுநாள் நுண்கதிர் படம் எடுப்பதற்காக புதுக்கோடடை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அனுப்பினேன் என்றும் அவருக்கு இடது கை தோள்பட்டையில் முறிவு இருப்பதாக அறிக்கை கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என அ.சா.ஆ.2 விபத்து பதிவேட்டு நகல் வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

12(11). அ.சா.5 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் காயம்பட்ட நபரின் நுண்கதிர் படத்தை நான் பார்க்கவில்லை என்றும் நுண்கதிர் படம் எடுத்த மருத்துவர் மூலம் மேற்படி மருத்துவ அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் மேற்படி அ.சா.1 ன் நுண்கதிர் படத்தை தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(12) எதிரி தரப்பில் The Hon'ble High Court in Chellapandi. Jeyam, Kasimayan, Seeniyammal, Bala -vs- State, rep. by the Inspector of Police, Sedapatti Police, in Cr.No/128/2023 has held that the weapon of crime not seized – Intimation sent from hospital to police not produced and marked – Failure to produce vital documents and defects in investigation create doubt in prosecution case என்ற முன்தீர்ப்பினை மேற்கோள்காட்டியுள்ளார்.

மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் இவ்வழக்கினை பரிசீலிக்கையில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 தனது சாட்சியத்தில் காயம்பட்ட நபருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே, ஸ்கேன்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:01:02 +0530

ரிப்போர்ட்டுகளை பெறவில்லை என்றும் சிவகங்கை மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட அசல் விபத்து பதிவேடு என்ன ஆனது என்று தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே இவ்வழக்கின் புலன்விசாரணையானது சரியான முறையில் மேற்கொள்ளவில்லை என்ற எதிரிகள் தரப்பு வாதம் வலுப்பெறுகிறது. எனவே அ.சா.1 க்கு ஏற்பட்ட கொடுங்காயம் 1 வது எதிரியால் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(13). அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.5 பொன்னமராவதி அரசு மருத்துவமனை மருத்துவர் தனது சாட்சியத்தில் 08.01.2019 ம் தேதி காலை சுமார் 8.40 மணிக்கு அ.சா.1 சிகிச்சைக்கு வந்தவர் தன்னை 4 ஆண்களும் 1 பெண் நபரும் சேர்ந்து காலை 7 மணிக்கு கல் மற்றும் கட்டையால் தாக்கியதாக கூறினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ–7 எதிரிகள் நீக்கல் அறிக்கையை 1 வது எதிரியின் மூன்று மகன்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று எதிரிகள் நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். இதுகுறித்து அ.சா.1 எவ்வித ஆட்சேபனையும் செய்து மனு தாக்கல் செய்யாதது உண்மையில் சம்பவம் நடைபெற்றதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(14). அ.சா.1 தனது புகாரில் எதிரிகள் தன்னை கற்களாலும், கட்டையாலும் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் கொண்டு வந்த கட்டை மற்றும் கற்களை கொண்டு தன்னை தாக்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் ஆயுதங்களை கைப்பற்றவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தாக்க பயன்படுத்தியதாக கூறப்படும் கட்டை மற்றும் கற்களை ஆகியவற்றை அரசு தரப்பில் கைப்பற்றி தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(15). அ.சா.1 தனது புகாரில் தன் கையில் இருந்து பர்சையும், அதில்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:01:08 +0530

இருநத பணம் ஏடிஎம் கார்டையும் பர்சுடன் பறித்து எதிரிகள் பறித்து கொண்டார்கள் என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் தனது கையில் இருந்த பர்ஸ், அதிலிருந்த ஏடிஎம் கார்டு மற்றும் கொஞ்ச பணத்தை வெள்ளைசாமி மூலம் எடுத்து கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 காலையில் தனது வீட்டு வாசலில் சாணி தெளித்து கொண்டிருக்கும் போது எதிரிகள் கற்களால் தாக்கியதால் ஓடி வந்ததாக கூறியுள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எடிஎம் கார்டை யார் எடுத்தார்கள் என்று தெரியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவ சமயத்தில் அ.சா.1 கையில் பர்ஸ், எடிஎம் கார்டு, பணம் வைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே அ.சா.1 தனது புகாரில் இல்லாத சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12(16). அ.சா.1 தனது புகாரில் தான் ஓடி வந்து வாணி வீட்டின் முன்புறம் ரோட்டில் விழுந்து விட்டேன் என்று கூறியுள்ளார். அசா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தன்று சம்பவ சமயத்தில் வாணி என்பவர் வீட்டிற்கு வெளியே நின்று பார்த்து கொண்டிருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் சொல்லப்படும் அ.சா.4 வாணி தனது சாட்சியத்தில் அ.சா.1ம் எதிரிகளும் தங்கள் பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது புகாரில் தான் ஓடி வந்து வாணி வீட்டின் முன்புறம் ரோட்டில் விழுந்ததாக கூறியுள்ள நிலையில், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுந்துள்ள நிலையில், அ.சா.1ற்கு ஏதிரிகளால் ஏற்படவில்லை என்ற எதிரிகள் தரப்பு வாதம் வலுப்பெறுகிறது. உண்மையில் அ.சா.4 சம்பவ இடத்தில் இருந்திருந்தால் எதிரிகள் அ.சா.1யை தாக்கியது குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளித்திருப்பார். எனவே அ.சா.4 சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரிய வருகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:01:15 +0530

12(17). அ.சா.1 தனது சாட்சியத்தில் தானாக எழுந்து நடந்து சந்தை வழியாக வந்து கொண்டிருந்தேன் என்றும் தனது அப்பா எதிரே வந்து கொண்டிருந்தார் என்றும் தான் நடந்த விவரங்களை கூறினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவ இடம் சென்றேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 சம்பவ இடத்திற்கு சென்றாரா? அல்லது சந்தையில் வைத்து அ.சா.1 யை பார்த்தாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(18). பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தில் சக்திவேல் கூரை வீட்டின் முன்புறம் சம்பவம் நடந்ததாக காணப்படுகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில் வாணி வீட்டின் முன்பு சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவ இடத்திற்கு வடக்கே ராஜசேகர் வீடு உள்ளது என்றும் தெற்கே காலியிடம் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ–6 மாதிரி வரைபடத்தில் சம்பவத்தின் தெற்கே சக்திவேல் கூரைவீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(19). அ.த.சா.ஆ.1 புகார்மனுவினை பரிசீலிக்கையில் 08.01.2019 ம் தேதி 8.00 மணிக்கு பெற்று மனுரசீது எண்:3/2019 கொடுத்ததாக காணப்படுகிறது. அ.த.சா.ஆ–4 முதல் தகவல் அறிக்கையை பரிசீலிக்கையில் 09.01.2019 ம் தேதி 20.30 மணிக்கு தகவல் பெறப்பட்டதாக காணப்படுகிறது. எனவே புகாரானது 08.01.2019 ம் தேதி பெறப்பட்டதா? 09.01.2019 ம் தேதி பெறப்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(20). அ.த.சா.ஆ–4 முதல் தகவல் அறிக்கையை பரிசீலிக்கையில் 08.01.2019 ம் தேதி குற்றம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளது. அதில் சம்பவ நேரம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:01:22 +0530

குறித்து குறிப்பிட்டு கூறவில்லை. எனவே புகாரானது வழக்கிற்காக உருவாக்கப்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(21). அ.சா.1 தனது சாட்சியத்தில் தான் தனது அம்மா, அப்பா மூவரும் சேர்ந்து நெற்குப்பை காவல்நிலையத்திற்கு முதலில் சென்றேன் என்றும் அங்கிருந்து சார்பு ஆய்வாளர் ராஜேந்திரன் என்பவர் நீங்களே புகாரை எழுதி கொடுங்கள் என்று தன்னிடம் கேட்டார் தன்னால் எழுத முடியவில்லை என்று தான் அவரிடம் கூறினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.த.சா.ஆ.1 புகார்மனுவினை யார் எழுதினார்கள் என்பதை விசாரணை செய்து மேற்படி நபரை சாட்சியாக சேர்க்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(22) அ.சா.1 னிடம் சம்பவம் குறித்து விவரம் கேட்டு எழுதியிருந்தால் வாக்குமூலத்தின் வடிவில் புகார் காணப்படும். ஆனால் அ.த.சா.ஆ.1 புகாரானது எழுதி மனு வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே புகார்மனுவை யார் எழுதினார்கள் என்பது குறித்து அரசு தரப்பில் விசாரணை செய்து, அவர்களை சாட்சியாக சேர்த்து விசாரிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது. எனவே அ.சா.1 போலீசாரிடம் புகார் மனு கொடுத்தது குறித்து முன்னுக்கு பின் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் அசா.1 ன் புகார்மனுவின் உண்மை தன்மை மீது ஐயப்பாடு எழுகிறது.

12(23). அ.சா.1 தனது புகாரில் தங்களுக்கும் தனது அப்பா தம்பியான சித்தப்பாவிற்கும் இடப்பிரச்சனை இருந்து வருகிறது என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனது அப்பாவிற்கும் எதிரிகளுக்கும் எதிரிகள் இருக்கும் வீடு சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான் என்றும் அந்த வீடு எதிரிகளுக்கு சொந்தமானது என்றால் சரிதான் என்றும் அந்த வீட்டில் எதிரிகள் மேற்கூரை வேயக்கூடாது என தனது அப்பா, அம்மா மற்றும் தான் பிரச்சனை செய்ததால் 1வது எதிரி

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:01:28 +0530

திருப்பத்தூர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் என்றும் அந்த வழக்கை தாங்கள் எதிர்த்து நடத்தி வருகிறோம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே எதிரிகளுக்கும் அ.சா.1 மற்றும் அவரது அப்பாவான அ.சா.2 க்கும் இடையே சொத்து சம்பந்தமான இருந்த முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்ற எதிரிகள் தரப்பு வாதம் வலுப்பெறுகிறது.

12(24). அ.த.சா.ஆ–2 விபத்து பதிவேட்டு நகலை பரிசீலிக்கையில் அ.சா.1 யை சிகிச்சைக்கு கொண்டு வந்தவர் அம்மா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ–1 புகார்மனுவினை பரிசீலிக்கையில் மருத்துவ நமூனா 3/எம்எல்ஓபிஎஸ்/19 பொன்னமராவதிக்கு கொடுத்து அனுப்பியதாக காணப்படுகிறது. உண்மையில் அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்து விட்டு மருத்துவமனைக்கு மருத்துவ நமூனாவுடன் சென்றிருந்தால் அ.த.சா.ஆ–2 விபத்து பதிவேட்டில் மருத்துவ நமூனா பற்றி குறிப்பிட்டிருப்பார்கள். எனவே அ.சா.1 சம்பவத்திற்கு பின்னிட்டு காவல்நிலையம் சென்றாரா? மருத்துவமனைக்கு சென்றாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது. அ.சா.1 ன் புகார்மனு உண்மை தன்மையுடையதா? நம்பகத்தன்மையுடையதா? என்ற ஐயப்பாடு எழுந்துள்ள நிலையிலும், அ.சா.1 ன் புகார்மனுவில் உள்ள சங்கதிகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையில் 1 வது எதிரி மீதான இதச பிரிவு 326 மற்றும் 2 வது எதிரி மீதான இதச பிரிவு 324 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12(25). 2 வது எதிரி மீதான இதச பிரிவு 427 ன் கீழான குற்றசாட்டை பரிசீலிக்கையில் 2 வது எதிரி நிகழ்நிலை புகார்தாரர் செல்போனை வாங்கி கீழே

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:01:35 +0530

போட்டு 90/- மதிப்புள்ள போனின் டெம்பர் கிளாசினை உடைத்து சேதப்படுத்தியதாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

12(26). அ.சா.1 தனது புகார்மனுவில் வெள்ளைசாமி, அவரின் மனைவி அழகுமீனாள் அவரின் மகன்கள் மூன்று பேரும் தன்னை கற்களாலும், கட்டையாலும் தாக்கி தன் போனை உடைத்து நொறுக்கிவிட்டார்கள் என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் தனது போனை வெள்ளைசாமி என்பவர் பிடுங்கி கல்லை வைத்து நைத்து உடைத்து போட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கானது 2 வது எதிரி அ.சா.1 ன் செல்போனை வாங்கி கீழே போட்டு ரூ.90/- மதிப்புள்ள போனில் டெம்பர் கிளாசினை உடைத்து சேதப்படுத்தியதாக உள்ள நிலையில், அ.சா.1 தனது புகாரில் யார் தனது செல்போனை வாங்கி உடைத்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்பதால் எதனடிப்படையில் 2 வது எதிரி செல்போனை உடைத்ததாக அரசு தரப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் கூறவில்லை.

12(27). அ.சா.1 தனது சாட்சியத்தில் வெள்ளைசாமி என்பவர் தனது செல்போனை பிடுங்கி கல்லை வைத்து நைத்து உடைத்து போட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(28). அரசு தரப்பு வழக்கானது 2 வது எதிரி தனது செல்போனை வாங்கி கீழே போட்டு ரூ.90/- மதிப்புள்ள போனில் டெம்பர் கிளாசினை உடைத்து சேதப்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. அ.சா.1 தனது சாட்சியத்தில் தனது செல்போனை பிடுங்கி கல்லை வைத்து நைத்ததாக கூறியுள்ள நிலையில் டெம்பர் கிளாஸ் மட்டும் உடைந்திருக்க வாய்ப்பில்லை.

12(29). அ.சா.7 புலன்விசாரணை அதிகாரி தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் செல்போன், ஸ்டெம்பர் ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி செல்போனை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.30 18:01:40 +0530

கைப்பற்றி சான்று பொருளாக குறியீடு செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது. எனவே 2வது எதிரி மீதான இதச பிரிவு 427ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(30). எதிரிகள் மீது இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டை பரிசீலிக்கையில் எதிரிகள் இருவரும் நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து உனனை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியதாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. அ.சா.1 தனது புகாரில் வாணி வீட்டின் முன்பாக அடித்து கொல்ல வேண்டுமென்றே அடித்து விட்டார்கள் என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை மிரட்டியது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் சம்பவத்தை கண்ணுற்று விலக்கிவிட்டதாக கூறப்படும் அ.சா.4 தனது சாட்சியத்தில் வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். எனவே எதிரிகள் மீதான இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(31). 1வது எதிரிக்கு எதிரான பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டு குறித்து பார்க்கும்போது பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் என்பது இயற்றப்பட்டதன் நோக்கமே பெண்களை இழிவுபடுத்தும் எண்ணத்துடன் எந்த இடத்திலும் பெண்களை பாதிக்கும் வண்ணம் ஒரு ஆண் நபர் எந்த செயலையும் செய்யக்கூடாது என்பதன் அடிப்படையிலேயே இயற்றப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் இந்த நீதிமன்றமும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய ஒரு முன்தீர்ப்பினையும் நினைவு கூர்கிறது.

The Hon'ble High Court of Madras in Anbazhayan – Vs – State reported in 2011 SCC Online Mad 1158 has held as "The court is of the considered opinion that the words 'any other place' found in section 4 are to be read 'ejusdem generis' The Tamil Nadu

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:01:46 +0530

Prohibition of Harassment of women Act 1998 was originally enacted consisted of 10 sections and came into force on30.07.1998. The offences u/s.4 A Harassment death, 4 B Harassment suicide and 4 C Presumption as to harassment death and abetment of harassment suicide have been included under subsequent amendments of the year 2002. Confining ourselves to the offence contemplated u/s 4 and looking into the objects and reasons of the enactment not towards informing ourselves of the amplitude of the Act but towards understanding the idea behind, If we find that the enactment was intended as a measure to eradicate eve teasing in public places. The Act informs what would constitute harassment in general terms in Section 3 and while prescribing a penalty for harassment under section 4 restricts the same to harassment committed at particular places. Proceedings further, we find that u/s 5 & 6 responsibilities are cast upon persons in charge of educational institutions, temple or other places of worship, cinema theatre or any other precincts and upon the crew of a public service 4 of the Act was meant to deal with offences occurring in the places informed or in places of like nature. If not so read, the mention of the particular place in section 4 would be rendered redundant and such could not have been ith legislative intent. To put it differently if the intent was to attract punishment for harassment at any and every place section 4 simply could have read as follows"

இந்த முன்தீர்ப்பினை பார்க்கும்போது இந்த சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கமே பெண்களை இழிவுபடுத்தும் எண்ணத்துடன் அவர்கள் பெண்மைக்கு களங்கம் விளைவிக்கும் வண்ணம் செயல்படும் நபர்களை தண்டிக்கவேண்டும் என்பதே ஆகும். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி தன்னை அவமானப்படுத்தியதாகவோ. இழிவுபடுத்தும் நோக்தோடு தாக்கியதாகவோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. 1வது எதிரிக்கு எதிரான இதச பிரிவு 326 குற்றம் நிரூபணம் செய்யப்படாத நிலையில் எதிரியின் செய்கை பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்செயல் என இந்நீதிமன்றம் கருதவில்லை. இந்த முன்தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும்போது எதிரியின் செய்கை இப்பிரிவின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:01:53 +0530

செயல் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது

12(32). அ.சா.1ன் சாட்சியம் அவர் கொடுத்த புகாருக்கும், 161(3)கு.வி.மு.ச வாக்குமூலத்திற்கும் முற்றிலும் முரண்பட்டு காணப்படுகிறது. அ.சா.1 நீதிமன்றத்தில் முதல் முறையாக புதிய சங்கதிகளை குறித்தும், மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார் என்பதை காண முடிகிறது. அ.சா.1, அ.சா.5ன் சாட்சியத்திற்கு ஆதரவாக மருத்துவ சாட்சியம் அமையப்பெறவில்லை. மேலும் அ.சா.1ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் வேறு எந்த சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1ன் சாட்சியம் உண்மை தன்மையுடனும் நம்பகத் தன்மையுடனும் காணப்படவில்லை. இந்நீதிமன்றத்தின் நம்பிக்கையை பெறவில்லை. மேலும் இவ்வழக்கில் சம்பவத்தில் எதிரி பயன்படுத்தியதாக கல் மற்றும் கட்டையை கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேலும் அ.சா.1ன் செல்போனை நொறுக்கி விட்டதாக கூறியுள்ள நிலையில் மேற்படி செல்போனின் சேதமதிப்பு சான்று, செல்போனை அரசு தரப்பில் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை. மேலும் சம்பவம் இடம் குறித்து அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் அ.த.சா.ஆ–1 புகார்மனுவினை எழுதிய நபர் யார் என்பது குறித்து விசாரித்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரணை செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது. மேலும் அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை காரணமாக முன்விரோதம் உள்ளது என்பது தெள்ளத்தெளிவாக தெரிய வருகிற நிலையில், தனிப்பட்ட சாட்சியம் அல்லாத உறுதியூட்டப்படாத நலன் கொண்ட அ.சா.1ன் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு குற்றச் சம்பவம் நிரூபணம் செய்யப்பட்டது என எடுத்துக் கொள்ள முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

13. இவ்வழக்கின் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:01:59 +0530

அரசு தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டதென முடிவு செய்து 1வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 326, 427, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2வது குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவுகள் 324, 427, 506(2)ன் கீழும் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குற்றம்சாட்டப்பட்டவரை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 437A-ன் கீழ் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பின் தானாக ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

14.இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:02:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | சொர்ணாம்பிகா / புகார்தாரர் / காயம்பட்ட நபர் |
| அ.சா.2 | சக்திவேல் / சம்பவத்தை கேள்விபட்ட நபர் |
| அ.சா.3 | வைரவன் / பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.4 | வாணி / சம்பவத்தைகண்ணுற்ற நபர் |
| அ.சா.5 | ஜனனிபிரியா / மருத்துவர் |
| அ.சா.6 | கருணாநிதி / சார்பு ஆய்வாளர் |
| அ.சா.7 | அரங்கநாயகி / ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | அ.சா.1 | புகார்மனு |

| | | |
|---|---|---|
| 10.05.2023 | | |
| அ.த.சா.ஆ.2 19.11.2025 | அ.சா.5 | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.3 19.11.2025 | அ.சா.5 | காயகருத்துரை |
| அ.த.சா.ஆ.4 04.03.2025 | அ.சா.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 04.03..2025 | அ.சா.6 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.6 04.03.2025 | அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.7 04.03.2025 | அ.சா.6 | எதிரி நீக்கல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 11.03.2026 | அ.சா.6 | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள்:-** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணம், சான்றுபொருள் :-** இல்லை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:02:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

**குறிப்பு:-**

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்கள்.

/ உண்மை நகல் /

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.30 18:02:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.